**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19 ஆம் நாள் புதன்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. சே.சங்கீதா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No.81/2017** வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | சத்தியவிஜயராஜன் | **வயது** | : | 58 |
| **த.பெ** | : | ரங்கநாதன் | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | கருங்காலிகுப்பம் | **தொழில்** | : | வியாபாரம் |

**<u>19.11.2025 – வா.சா.1 குறுக்கு விசாரணை</u>**

1)எனக்கு பூர்வீகம் ஆரணி தாலுக்கா கொளத்தூர் கிராமம் ஆகும். எந்த வருடத்தில் தாவா கிராமத்திற்கு வந்தீர்கள் என்றால் 1973 ல் வந்தேன். பிரதிவாதிகளுக்கு பூர்வீகம் கருங்காலிகுப்பம் கிராமம் தான் என்றால் சரிதான். இந்த வழக்கில் 2 ம் வாதி என்னுடைய மனைவி என்றால் சரிதான். 2 ம் வாதியை வழக்கில் விசாரிக்க போகிறேனா என்றால் இல்லை. வழக்கில் குறிப்பிட்டுள்ள A மற்றும் B அட்டவணை சொத்துக்களில் எனக்கு பாத்தியப்பட்ட சொதது என்னவென்றால் A அட்டவணை சொத்து. என் மனைவிக்கு பாத்தியப்பட்ட சொத்து சர்வே நெம்பர் என்னவென்றால் சர்வே நெம்பர் 448/102. எனக்கு பாத்தியப்பட்ட சொத்தின் சர்வே நெம்பர் 442/2 சி2, (448) ( 101) ஆகும். மேற்படி 2 சொத்துகக்ளும் தனிதனி சொத்துக்களா என்றால் தனிதனி சொத்துக்கள் தான், அரசாங்கம் தனிதனியாகத்தான் கொடுத்தது.

2)மேற்படி 2 சொத்துக்களுக்கும் சக்குபந்தி தனிதனி தான் என்றால் சரிதான். என் சொத்திற்கு வடக்கே யாருடைய நிலம் உள்ளது என்றால் ஆரணி ரோடு உள்ளது, தெற்கில் பிரதிவாதிகளின் வீடு உள்ளது, கிழக்கில் சர்வே நெம்பர் 85 ல் 2 ம் வாதியின் வீடு உள்ளது, மேற்கில் சர்வே நெம்பர் 83 காந்தி செட்டியார் வீடு உள்ளது. என் மனைவி சொத்திற்கு வடக்கில் ஆரணி ரோடு, மற்றும் தெற்கில் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். என் மனைவி சொத்திற்கு கிழக்கில் சர்வே நெம்பர் 86 ல் பாலகிருஷ்ணன் ரைஸ்மில் உள்ளது, மேற்கில் என்னுடைய பட்டா நிலம் உள்ளது. தாவா அ அட்டவணை சொத்து குறிப்பிட்டுள் அயிட்டம் 1 மற்றும் 2 சொத்தை சேர்த்து தான் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். கீழ்தளம் உரக்கடையும், மேல்தளத்தில் நாங்கள் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான்.

3)மேற்படி கடைக்கும், வீட்டிற்கும் ஆரணி ரோடு வழியாகத்தான் சென்றுவருகிறோம் என்றால் சரிதான். வீட்டின் பின்பக்கம் வழியில்லை என்றால் வழி வைக்கவில்லை. நான் தாவாசொத்தை யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் அரசாங்கம் மனைபட்டா மூலம் கொடுத்தார்கள். என் மனைவிக்கும் அரசாங்கம் மனைபட்டா கொடுத்தார்கள். எப்போது பட்டா கொடுத்தார்கள் என்றால் 1998 ல் இரண்டு பேருக்கும் பட்டா கொடுக்கப்பட்டது. ஏற்கனவே நாங்கள்

மேற்படி அ அட்டவணைசொத்துக்களில் 20 வருடங்களாக அனுபவித்து வந்ததால் தான் பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வீடுகட்டிய அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான் (சாட்சி தற்போது மாற்றி இல்லை என்று கூறுகிறார்)

4)எனக்கு கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு என்று பட்டா குறிப்பிட்டு கொடுத்துள்ளார்கள் என்றால் எ அயிட்டம் 1, 2 சேர்த்து வடக்கு தெற்கு 8 ½ மீ, மறுபக்கம் 11 மீ இருக்கும், கிழக்கு மேற்கு 55 அடி ஆகும். (சாட்சி மேற்படி அளவீடு வீடு கட்டப்பட்ட அளவீடுகள் என்று தற்போது கூறுகிறார்) பட்டாவின் படி அளவீடுகள் எவ்வளவு என்றால் கிழக்கு மேற்கு 59 அடி, வடக்கு தெற்காக மேற்கு 35 அடி, கிழக்கில் 41 அடி ஆகும். மேற்படி பட்டாவில் கொடுக்கப்பட்டதாக நான் கூறும் அளவீடுகள் எனக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான். மேற்படி அளவீடுகள் வழக்கில் கூறியுள்ளேனா என்றால் பட்டா நகல் கொடுக்கப்பட்டுள்ளதால் மேற்படி அளவீடுகள் நான் வழக்கில் போடவில்லை. என் வீட்டிற்கு கிழக்கு, மேற்கு, தெற்கில் வீடுகள் சுற்றியுள்ளது என்றால் சரிதான்.

5)தெற்கில் கட்டப்பட்டுள்ள பிரதிவாதிகள் வீடு 1985 ல் கட்டப்பட்டது. தாவா பி அட்டவணை சொத்து தாவா எ அட்டவணை சொத்திற்கு கிழக்கு பக்கத்தில் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய வழக்கில் தாவா எ அட்டவணை சொத்திற்கு கிழக்கில் பி அட்டவணை சொத்து உள்ளது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் ஆக்கிமித்துள்ளதாக அளவீடுகள் எவ்வளவு என்றால் எ ஷெட்டியூலுக்கு பின்பக்கம் வடக்கு தெற்கே 10 அடி, கிழக்கு மேற்கு 65 அடி நீளம் இருக்கும். இந்த பகுதி பிரதிவாதி வீடு கட்டி உள்ளார் என்றால் பிரதிவாதிகள் ஆக்கிமித்து உள்ளார்கள். 1985 ம் வருடம் மேற்படி வீடு கட்டிவிட்டார், ஒவ்வொரு பிரதிவாதிகளும் 5 வருடங்கள் இடைவெளியில் 3 வீடுகளை ஆக்கிரமித்து கட்டியுள்ளார்கள்.

6)பி அட்டவணை சொத்றி்கு சென்றடைய வேண்டும் என்றால் எந்த வழீயாக செல்ல வேண்டும் என்றால் ஆரணி ரோடு வழியாக செல்லவேண்டும். எதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதிகள் வீடு கட்டி ஆக்கிரமித்து உள்ளதால் அதை அக்ற்ற வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையரை நியமித்து அளவீடு செய்ய மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. வீடு கட்டியுள்ள இடமானது பிரதிவாதிகளுக்கு பூர்வீக சொத்து என்றால் இல்லை. 1985 ல் பிரதிவாதிகள் வீடு உள்ளது என்று எனக்கு தெரியும் என்றால் 1 வீடு 1985 முதல் உள்ளது என்று எனக்கு தெரியும். இந்த வழக்கு தா்ககல் செய்வதற்கு முன்பு வீடுகள் இருந்ததா என்றால் இருந்தது, கொஞ்சம் கொஞ்சமாக கட்டியிருந்தார்கள். மேற்படி விவரத்தை நான் வழக்கில் தெரிவித்தேனா என்றால் எங்கள் இடத்தில் அவர்கள் மாட்டுகொட்டாய் தான் கட்டியுள்ளார்கள், வீடு கட்டவில்லை.

7)மேற்படி மாட்டுகொட்டாய் கட்டப்பட்ட விவரமும் வழக்கில் கூறவில்லை என்றால் சரிதான். மேற்படி மாட்டுகொட்டாய் பிரதிவாதிகளின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் என்னால் பார்க்கமுடியாது, எனக்கு தெரியாது. எதற்காக நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தற்போது மேற்படி இடம் எனக்கு வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ-3 முதல் 7 வரையிலான குடிநீர் கட்டண ரசீது, வீட்டுவரிரசீதுகள், மின்கட்டண ரசீதுகள் ஆகியவை தற்போது நான் குடியிருக்கும் வீட்டிற்கு மட்டும் தான் என்றால் சரியல்ல. மேற்படி ரசீதுகள் எதற்காக கட்டப்பட்டது என்றால் என் வீட்டிற்கும் காலி பகுதிக்கும்

கட்டப்பட்டது. சொத்துவிபரத்தில் வீட்டு கதவு எண்ணும் சர்வீஸ் என்னும் குறிப்பிடவில்லை என்றால் அதற்காக தான் வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ரசீதுகளில் கதவு எண் என்னவென்று உள்ளது என்றால் 766 என்று உள்ளது. சர்வீஸ் நெம்பர் 56, 366, 105 ஆகும்.

8)என் சர்வீஸ் எண்ணை வழக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றல் ரசீதை கொடுத்துள்ளேன் வழக்கில் குறிப்பிடவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனக்கும் பிரதிவாதிகளுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் இல்லை. பிரதிவாதிகளிடம் அவர்கள் என்னுடைய நிலத்தை கொடுக்கவேண்டும் அது என்னுடைய நிலம் என்று கேட்டிருக்கிறேனா என்றால் 2017 லேயே கேட்டிருக்கிறேன். இந்த வழக்கில் பிரதிவாதிகள் ஆக்கிமித்துள்ளதாக கூறும் இடத்தை அகற்றி எனக்கு சுவாதீனம் வேண்டி பரிகாரம் கேட்கவில்லை என்றால் கேட்டுள்ளேன். நான் அப்படி தாக்கல் செய்யவில்லை, மேலும் தடைஉத்தரவு மட்டும் தான் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் உள்ளே ஆக்கிமித்து விட்டார்கள் என்று பரிகாரத்தை திருத்தல் செய்ய திருத்தல் மனு கொடுத்துள்ளேனா என்றால் திருத்தல் மனு கொடுக்கவில்லை.

9)இந்த வழக்கில் நான் ஏன் விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் தடை உத்தரவு போட்டதால் நான் கேட்கவில்லை. விளம்புகை பரிகாரம் கேட்காமல் வெறும் தடை உத்தரவு மட்டும் கேட்டதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்தபிறகு தாவா அ அட்டவணையில் 2 ம் அயிட்ட சொத்தை என் மனைவியிடமிருந்து 2018 ல் தானசெட்டில்மெண்ட் மூலம் என் பெயருக்கு பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். மேற்படி விபரத்தை இந்த வழக்கில் கூறி வழக்குரையை திருத்தியுள்ளேனா என்றால் இல்லை. என் வீட்டிற்கு மேற்கில் அரசுக்கு பாத்தியப்பட்ட ஒரு பாட்டை இருந்தது என்றால் எனக்கு தெரியாது.

10)மேற்படி பாட்டைக்கு தான் நான் பட்டா வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வீடு மற்றும் மாட்டுகொட்டாய்போட்டுள்ள இடம் அவர்களுக்கு சொந்தமான இடம் என்றும், நான் கட்டியுள்ள வீடு மட்டும் தான் எனக்கு சொந்தமானது ஆகையால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2025.11.20 13:29:12 +0530

District Munsif,
Polur.